www.tamilarangam.net

சிறீலங்காவின் 'ஜெயசிக்குறுய்'
போர் நடவடிக்கை இரண்டாவது
ஆண்டினுள் காலடி
எடுத்துவைக்கையில் கடந்த ஒரு
ஆண்டு காலத்தில் சிங்களத்தின்
மிகப்பெரிய இராணுவ படைநகர்வை
தோற்கடிக்கும் பாரிய பணியில்
ஈடுபட்டு வீரச்சாவைத் தழுவிக்
கொண்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட
எமது மாவீரர்களுக்கு
வீரவணக்கங்கள்.
இந்த மாவீரர்களின் அளப்பரிய
தியாகத்தால்
கட்டியெழுப்பப்பட்டுள்ள
வெற்றிக்கான அத்திவாரத்தில்
நின்று போராடி வெற்றியை
நமதாக்குவதே எமது தேசம்
அம்மாவீரர்கள் முன் செய்யும்
பிரகடனமாகும்.

---

**அனைத்துலக செயலகம்**
**தமிழீழ விடுதலைப் புலிகள்** 12.05.1998

www.tamilarangam.net

# வெற்றியை எமதாக்குவோம்

அன்பான புலம்பெயர் வாழ் தமிழீழ மக்களே!

இன்று எமது விடுதலைப் போர் தன் வெற்றிக்கான பாதையில் மற்று மொரு பரிணாமத்தை வெளிக்காட்டியுள்ளது.

தன் பிரதான இராணுவபலத்தை ஒரு போர் முனையில் குவித்து - கனரக டாங்கிகளையும் குண்டுவீச்சு விமானங்களையும் பாவித்து "விடு விக்கப்பட்ட" தமிழர் பிரதேசங்களை இலகுவாக ஆக்கிரமித்து விடலாம் என்ற சிங்கள இனவாத இராணுவப் போர் தந்திரம், எமது வீரமிகு போராளிகளின் தியாகத்தால் - உழைப்பால் இன்று வன்னிப் போர் முனையில் தோற்கடிக்கப்பட்டு வருகின்றது.

சுமார் 50,000 எதிரிப்படைகளை - அவர்களது கனரக ஆயுதத் தளபாட உதவிகளை - அதற்கான வான், கடல் ஆதரவை - சில சர்வ தேச நாடுகளின் கண்மூடித்தனமான பக்கபலத்தை - எதிர்த்து நின்று எம் சின்னஞ்சிறிய தேசம் ஒரு ஆண்டுகாலம் தொடர்ச்சியாகப் போராடி ஓர் போர்க்கள வரலாற்றை உருவாக்கியுள்ளது.

இன்று சிங்கள தேசத்தின் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கைக்கு எதிரான எமது போர் அணிகளின் வன்னிச் சமர் தமிழர்களின் போராற்றலினை முழு உலகுக்கும் வெளிக்காட்டியுள்ளது. மரபு ரீதியான பாரிய எதிரியை எதிர்கொண்டு போராடும் ஆற்றலை எமது போரணிகள் பெற்றுவிட்டது நிருபிக்கப்பட்டு வருகின்றது. முழு சிங்கள இராணுவத் தலைமையும், அதனது சர்வதேச ஆலோசகர்களும் வகுக்கும் போர் உபாயங்களையும் நடவடிக்கைகளையும் எமக்கே உரிய சாதுரியத்துடன் எதிர்கொண்டு முறியடிக்க முடியுமென நாம் நிருபித்துகாட்டி வருகின்றோம்.

எம் போராளிகள் புளியங்குளத்தில் பாசறை அமைத்து தொடர்ந்து போராடி, எதிரியின் மூர்க்கத்தனமன ஆட்பலத்தையும் ஆயுத பிர யோகத்தையும் சிதைத்து வருகின்றனர். மாங்குளம் சமர் புலிகளின் இராணுவ வரலாற்றில் மற்றுமொரு பாய்ச்சலைக் காட்டுகின்றது. தாண்டிக்குளம், ஓமந்தை, மன்னங்குளம் என ஒவ்வொரு போர் முனை களிலும் எமது தமிழர் படையணிகள் நடாத்திய போர் நகர்வுகள் சிங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கள இராணுவ இயந்திரத்தை நிலைகுலைய வைத்து எம் மண்ணை விட்டு அவர்களை விரட்டும் எமது தர்மானத்தைப் புலப்படுத்தும் பிர கடனங்களாகும்.

www.tamilarangam.net

சிங்களவர்களின் 'ஜெயசிக்குறுய்' தன் இலக்கை அடையாமல் திண்டாடி ஆண்டொன்று கடக்கையில் தமிழர்களாகிய நாம் அந்த வெற்றியை நமதாக்கும் பணியில் எம்மை ஈடுபடுத்தியாகவேண்டும்.

எம் போராளிகள் போர் முனையெங்கும் உதிரம் சிந்தி உயிர் கொடுத்து உரிமைப்போரை வெற்றிக்கு அழைத்துவர அணிவகுத்து நிற்கின்றனர்!

எம் உறுதி மிகு தலைவரின் தலைமையில், தமிழர் தேசத்தின் விடுதலை அவாவைப் பாதுகாத்து வெற்றிக்கு அழைத்துச் செல்ல வீரமிகு தலைமுறை அணிவகுத்து நிற்கின்றது!

எம் தேசத்தின் வரலாறு பூராவும் அதன் மண் பரப்பில் - கடல் பரப்பில் - விண் பரப்பில் பரந்து நிற்கும் கரும்புலிகள் அங்கே அந்த வெற்றியை நமதாக்க அணிவகுத்து நிற்கின்றனர்!

அன்புள்ள மக்களே!

இந்த வரலாற்று முக்கியமான கணங்களில் உங்களின் மனப்பூர்வமான உணர்வுபூர்வமான ஈடுபாடே போர் முனையில் எம் தமிழர் எதிர்காலத்தை வெற்றிக்கு அழைத்துவரப் போராடும் போராளிகளின் கரங்களைப் பலப்படுத்தும். ஒரு பலமான எதிரிக்கு எதிராக நாம் நடத்தும் தர்மயுத்தம் வெற்றி பெற வேண்டுமாயின் எம் போராளிகளின் போரிடும் ஆற்றல் அதிகரிக்கப்பட வேண்டும். ஒரு மரபு ரீதியான இராணுவத்தின் தேவைகளை இன்று தமிழர் போரணிகளும் கொண்டுள்ளனர். இதனை மனதில் நிறுத்தி நீங்கள் உங்கள் வெற்றிக்கான பணியாக தமிழர் போராற்றலை பலப்படுத்த உழையுங்கள். இதுவே வெற்றியை எமதாக்கி எதிர்காலத்தை எம்வசப்படுத்த எம்முன் உள்ள தீர்வாகும்.

**"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"**

அனைத்துலக செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

www.tamilarangam.net



நாம் எமது விடுதலை இலட்சியத்தை அடையத் தொடர்ந்து போராடுவோம்.

இத்தனை காலமும் நாம் சிந்திய இரத்தமும், நாம் செய்த உயிர்த் தியாகங்களும் வீண்போகாதென்ற திடமான நம்பிக்கையுடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

எமது புனித மண்ணைத் தமது ஆக்கிரமிப்புப் பாதங்களால் அசிங்கப்படுத்தி நிற்கும் எதிரிப்படைகளை எமது மண்ணில் இருந்து விரட்டியடிப்போமென்ற திடசங்கற்பத்துடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

உறுதியுடன் போராடும் தேசமே இறுதியில் வெற்றிபெறுமென்ற உண்மையை நெஞ்சில் நிறுத்தி, நாம் செயலுறுதியுடன் போராடுவோம்.

மனவலிமையின் நெருப்பாக எரிந்து எமது மண்ணின் விடுதலைக்காகக் களமாடி வீழந்த மாவீரர்களை நினைவுகூர்ந்து, நாம் இலட்சிய உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம்.

**"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"**

மேதகு வே. பிரபாகரன்

தலைவர்

தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்